புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | காற்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூசு. } யாழ்ப்பாணம்:—குரோதன ௵ சித்திரைமீ ௨௪ உ; (1925 மே 7) வியாழக்கிழமை. { இலக்கம்—அச.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்'
வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டிவெள்ளியிலும் 1-ம் நெ. 2-ம் நெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முாசுருத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புகொடி, காஞ்சி அரணுக் கொடி, கால் தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல்தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதாவெள்ளி தங்க நகைகளும் பட்டு பருத்தி முதலிய ஜவுளி திறுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தொ. வெ. சென்னிசெட்டி & சன்ஸ்
சராப், ஜவுளி வியாபாரம்
குகை சேலம் தென் இந்தியா.

(H. 31.)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஒளஷதங்களனைத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

பழனி, சி. எம். சாமி

## மகா வீரிய தங்க பஸ்பம்.

☞வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.
பரீட்சைக்ஷக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுககும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையம் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுந்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

### குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

### குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், நோவை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணெ.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வப்படை நிவாரணி.

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரோநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.
வி. பி. சார்ஜ் வேறு.

சித்தஆயுள்வேத டாக்டர்,

**சி. மலையப்பசாமிப்பிள்ளை.**

நித்தியானந்த மெடிக்கல்ஹால், பழனி

(Q 31 B.)

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*South Arcot District*).

## ஏஜண்டு தேவை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்தரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஒளஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய கலன்களை அடையக்கூடிய துமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், [illegible]வலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த வி[illegible] வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதுதவிர வேறு மருந்து கிடைப்பது அரிதிலுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேகூடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காக இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது நெய்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினலாவதுமுன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

(Y. 38).


## மிருகத்தின் கொழுப்பு மலிவுதான்;

ஆனல் அது சேர்ந்தால் நல்ல தைலமுண்டாகாது. மிருகக் கொழுப்பினல் தைலம் செய்வது சுலபமே, விலையும் சரசமாகும்.—ஆனல் அது பொதுஜனங்கள் மனதிற்கு ஒப்பாது.

### லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்.

செய்வதில் இந்தத் துர்நாற்றமுடைய மிருகக் கொழுப்பு விலக்கப்படுகிறது. ஆகையினலே அது மிகவும் உயர்ந்த மருந்தாகிறது. மனதிற்கு ஒத்துமிருக்கிறது.

5—L—25.




(Y. 41. C.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ௵ சித்திரைமீ உ௰ வியாழக்கிழமை.

## இப்படிச் சோதித்தல் ஆகுமா?

தமது பிரசைகளாயுள்ளார் வறுமையின்றி வாழும்வண்ணம் அவர்கட்குத்துணை புரிதல் செங்கோன் மன்னர்கடனாகும். அங்ஙனமின்றிக் குடிகளாயுள்ளவர்கட்கு வறுமைக்காகிய மார்க்கத்தைக்காட்டிவிடுதல் அரசினர்க்குச் சிறிதும் அடாது.

சென்றவாரம் கொழும்பிலே லிகிதர்பகுதிப் (கிளேறிக்கற்) பரீக்ஷை யொன்று நடைபெற்றது. இலங்கை முழுவதிலுமுள்ள மாணவர்களுள் 1050 பிள்ளைகள் வரையில் இப்பரீட்சையிற் பிரவேசித்தனர். இப்பரீட்சையிற் சித்தியடைந்தால் அரசினரிடத்தில் யாதாயினும் உத்தியோகத்தைப் பெற்று அதுவாயிலாகத் தாம் வயிறு வளர்க்கலாமேன்பதே இப்பிள்ளைகளின் நோக்கம். இந்நோக்கம் நன்றே க்க மேன்பதற்கு ஆட்சேபமில்லை. உத்தியோக ஸ்தானத்திற்கு வேண்டியவர்கள் ஆக முப்பது பேர்தானும். அப்படியிருப்பவும் 1050 பிள்ளைகள் இப்பரீட்சையிற் பிரவேசித்திருத்தல் இவ்விலங்கைத் தீபகத்தில் வசிக்கும் பிள்ளைகளின் தாரித்திரிய நிலைமையையும் இவர்கள் உத்தியோகஞ் செய்தன்றி வேறு எவ்வகையாகவும் காலம்போக்கும் ஆற்றலற்றவர்களேன்பதையும் இங்குள்ளார்க்கு அரசாங்க உத்தியோகத்துள்ள பேரார்வத்தையும் இனிதுகாட்டுகின்றது. நிற்க,

இப்பரீக்ஷையிற் பிரவேசித்தபிள்ளைகளுள் மிகச் சிலரொழிந்த ஏனைய பிள்ளைகளேல்லாரும் இலங்கையின் மற்றும் பாகங்களிலிருந்தே பரீக்ஷையிற் பிரவேசிக்கும்பொருட்டுக் கொழும்புமாநகருக்குச் செல்லவேண்டியவர்களானுர்கள். இவர்களுள்ளும் நூற்றுக்கு ஐம்பது விகிதமானோர் யாழ்ப்பாணத்துள்ள தமிழ்ப்பிள்ளைகளேன அறியலானேம் திரிகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, காலி முதலான தூரித்த இடங்களிலிருந்து இப்பரீட்சைக்கு வந்த பிள்ளைகளும் பலருளர். சுருங்கச் சோல்லுகில் இலங்கையின் எந்த மாகாணத்திருந்தாலும் அவர்களேல்லாம் இப்பரீட்சையிற் பிரவேசிக்கிற் கொழும்புமாநகருக்கே வந்து சேருதல்வேண்டும். அரசினர் இப்படிப்பட்ட பரீட்சைகளை நடத்தும்போது பெரும்பான்மையும் கொழும்பிலேயே வைத்துக்கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்வதனாலே யாழ்ப்பாணம் முதலிய தூரித்த இடங்களிலிருந்துவரும் மாணாக்கர் அதிக சிரமத்திற்கும் பெரும் பொருட்செலவிற்கும் ஆளாகின்றனர். யாழ்ப்பாணம் முதலிய தூரித்த இடங்களிலிருந்து கொழும்பிற்கு இப்படிப்பட்ட பரீட்சையின்பொருட்டுச் செல்லும் பிள்ளைகட்கு, அவர்களுடைய பரீட்சைக் கட்டணமாகிய பத்து ரூபாவைவிட, புகைரதச் செலவு, உடைச் செலவு, விடுதிச் செலவு, இன்னோரன்ன பிறசெலவு ஆகிய எல்லாச் செலவுமாகச் சராசரி ரூபா 75 வரையிற் செலவாகும். இச்செலவின் பொருட்டு ஏழைப் பெற்றோர் பலர் தங்கள் பிள்ளைகட்கு ஆபரணங்களை ஈடு வைத்துக் கடன்பட்டுப் பணம்பெற்றுக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். 1050 பிள்ளைகளுள் 30 பிள்ளைகள் தவிர 1020 பிள்ளைகளும் வியர்த்தமாகப் பணத்தைச் செலவு செய்ததும் கொழும்புமாநகரத்தைச் சுற்றிப்பார்த்ததுமே பெற்றபயன். நூற்றுக்குத் 93 பேர்வரையில் நிச்சயமாகச் சித்தியடையாதொழியவேண்டிய இப்பரீட்சையை அரசினர் கொழும்பு நகரமோன்றில் மாத்திரம் வைத்து நடத்திப் பிள்ளைகட்குப் பெரும் பொருட் செலவையும் சிரமத்தையும் பெற்றோர்க்குத் தரித்திரத்தையும் சற்றில் மனஸ்தாபத்தையும் தேடி விடுவதனால் வரும் நன்மைதான் யாதேன அறியேம். "கேம்பிறிஜ்"சர்வகலாசங்கத்தார் தங்கள் ஸீனியர் ஜூனியர் முதலிய பரீட்சைகளையும், "லண்டன்" சர்வகலாசங்கத்தார் "மற்றிக்" முதலிய பரீட்சைகளையும் இலங்கையில் வேண்டிய இடங்கள்தோறும் வைத்து நடாத்துவது போல, மாட்சிமைதங்கிய நமது அரசினரும் இலங்கையிலுள்ள மாகாணங்களின் பிரதான நகரங்களில் தங்கள் அரிய பரீட்சைகளை வேண்டிய காலத்தில் வைத்து நடத்தினால் அவர்கட்கு வரும் நஷ்டம் யாதோ? கத்தி யிருக்குமிடத்திற்கு மரையைக் காவுவதை விடுத்து மரை கிடக்கு மிடத்திற்குக் கத்தியை எடுத்துச் செல்வதன்றே முறையாகும். இங்குள்ள எல்லா மாகாணங்களின் தலைநகரங்களிலும் இப்படிப்பட்ட பரீக்ஷைகளை வைத்து நடத்துவது அரசினருக்குச் சிரமமாகவிருந்தாலும், கண்டி காலி அனுராசபுரம் யாழ்ப்பாணம் முதலிய பிரதான நகரங்களிலாயினும் இப்பரீட்சையை வைத்து நடத்தல் ஆகுமே! கிளேறிக்கற் பரீக்ஷையிற் பிரவேசிக்கும் பிள்ளைகளுள் நூற்றுக்கு 50 விகிதத்திற்கு மேற்பட்ட தொகையினர் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளாவர். பரீட்சையிலே தெரிந்தெடுக்கப்படும் பிள்ளைகளுள் நூற்றுக்கு 75 விகிதமானோர் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகளாவர். 1924ம் ஆண்டு எப்பிரல்மீ நிகழ்ந்த கிளேறிக்கற் பரீக்ஷையில் அதிக திறமை யுடையவர்களேனத் தெரிந்தெடுக்கப்பட்ட பிள்ளைகள் 27 பேராவர். இவர்களுள் 21 பிள்ளைகள் யாழ்ப்பாணத்து மாணவராவர். இங்ஙனமேல்லாமிருப்ப அரசினர் கொழும்பில் மாத்திரம் இப்படிப்பட்ட பரீட்சைகளை வைத்து நடாத்தி மற்றும்மாகாணங்களிலுள்ள மாணவர்கட்குப் பெருஞ் சிரமமும் பொருட்செலவும் ஆக்கிவிடுதல் தவறுகும்.

இடங்கள்தோறும் இப்பரீட்சைகளை வைத்து நடாத்துவதனால் அதிக பொருட்செலவு ஏற்படுமேன அரசினர் ஆட்சேபித்தல் கூடும். ஆனால் கிளேறிக்கற் பரீட்சையிற் பிரவேசிக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் 10 ரூபா கட்டணப் பணமாகும் கிளேறிக்கற் பரீட்சையென்றவுடன் ஆயிரத்திற்குமேற்பட்ட மாணவர் தனித்தனி கட்டணங் கட்டிப் பரீட்சை எடுக்கின்றார்கள். 1000 மாணவர் இப்பரீக்ஷை யெடுத்தாலும் 10000 ரூபா பரீக்ஷையின்பொருட்டு அரசினரிடஞ் செல்லும். இப்பெருந் தொகை பரீட்சைச் செலவிற்குப் போதியதாகும். இன்னும் ஒரு தொகைப் பணம் இதனால் எச்சமாகவு முண்டெனலாம். இப்படியேல்லா மிருப்ப அரசினர் கொழும்பில் மாத்திரம் இப்பரீட்சையை வைத்து நடத்துவதற்குப் பிரத்தியட்சமான நியாயம் யாது மில்லையாம். அந்தரங்கமான காரணம் சிலவுளவேன - ஊரவர்கள் சோல்வர் அவற்றை இங்கே எடுத்துக் காட்டுவது முறையன்று.

வருஷத்தில் ஒருமுறையேனும் பலமுறையேனும் சனங்கட்கு ஏற்படும் இக்[...]த்தையும் பொருட்செலவையும்பற்றி நமது சட்டசபைச் சனப் பிரதிநிதிகள் நன்கு சிந்தித்து இவ்விஷயமாகச் சட்டநிருபணசபையிற் பேசுதல்வேண்டும் இடங்கள்தோறும் இப்படிப்பட்ட பரீக்ஷைகளை வைத்துநடாத்துவரேல் இன்னும் அநேகபிள்ளைகள் கிளேறிக்கற் பரீக்ஷை யெடுப்பார்கள். அதனால் அரசினருக்கும் வருவாயுண்டாம்.

## உலகம் பலவிதம்.

அப்புக்குட்டிச் சட்டம்பியாருக்கு வயசு ஐம்பதுவரையிலிருக்கும். அவர் தமிழ்க் கல்வியறிவுடையவர். திருவாதவூரடிகள்புராணம் கந்தபுராணம் முதலிய சில நூல்கட்குத் தமதுஉபாத்தியாயரிடத்துக் கிரமமாக அர்த்தங்கேட்டுள்ளவர். இலக்கண நூல்களுள் நன்னூலைச் சந்தேக விபரீதமின்றிக் கற்றவர். கோயில்களிலே புராணபடனம் நிகழுங்காலங்களில் ஆங்காங்குசென்று பயன்சொல்லுபவர். அவர் தமது வீட்டித்துச் சிறிதுதூரத்திலுள்ள "மிஷன்" பள்ளிக்கூடத்திலே ஏட்டுப்பாடங்கள் படிப்பிக்கும் ஒரு உபாத்தியாயராகவிருந்தார். பாதிரிமார் அவருக்கு 15 ரூபா மாசவேதனம் உதவிவந்தார்கள். அப்புக்குட்டிச்சட்டம்பியார் தக்க தமிழறிவு உடையவராகவிருப்பவும் அவருக்குப் 15 ரூபா மாத்திரம் சம்பளமாகக் கொடுக்கப்பட்டு வந்தமைக்குக் காரணம் யாதெனில், அவர் பாதிரிமார்க்கத்திற் பிரவேசிக்க மறுத்துவிட்டதேயாகும். அவர் பாதிரிமாரின் எண்ணத்திற்கு இசைய நடந்திருந்தால் அவருக்கு மாசம் மூப்பது முப்பத்தைந்து ரூபாவிகிதம் வேதனம் கிடைத்திருக்கும் அப்புக்குட்டி உபாத்தியாயரெனிலோ ஒருபோதும் மனந்திரும்புவதற்கு உடன்படமாட்டார். பாதிரிமார் அவ்விஷயத்திற் பலமுறைமுயன்றும் பலிக்காமையினால் அவருடைய வேதனத்தை உயர்த்திக்கொடுக்க நினைத்திலர். ஏட்டுப்பாடம் பயிற்றுவதில் அப்புக்குட்டி உபாத்தியாயர் திறமையுடையவராகவிருந்தபடியினாலும் அவருடைய செல்வாக்கினால் அப்பள்ளிக்கூடத்தில் இருபது இருபத்தைந்து பிள்ளைகள் சேர்ந்து படித்துவந்தமையினாலும் பாதிரிமார் அவரைப் பள்ளிக்கூடத்தினின்றும் விலக்காதிருந்தார்கள். அவர் கடவுட்பத்தி பெரிதும் உடையவர். சைவசமயத்திற்குரிய ஆசார அநுட்டானங்களைப் பேணி நடப்பவர். எப்பொழுதும் ஸ்நாநஞ்செய்து சந்தியாவந்தனம்முடித்து, தமது நெற்றியிலே திரிபுண்டரமாகத்தரித்த விபூதியும் சந்தனப்பொட்டும் விளங்கவே பள்ளிக்கூடத்திற்குச் செல்வார். அதனைக்காணுந்தோறும் பாதிரிமாருக்கும் அப் பள்ளிக்கூடத்து ஏனைய உபாத்தியாயர்கள் சிலருக்கும் பெரும் ஆத்திரம் உண்டாகும். உண்டானாலும் என்செய்யலாம். அப்புக்குட்டி உபாத்தியாயர் அவ் வித்தியாசாலைக்கு இன்றியமையாதவராகவிருந்தார்.

*   *   *

இப்படி யிருந்துவரும்போது நமது உபாத்தியாயருக்கு ஒரு பேரிடர் நேர்ந்தது. அவருடைய மனைவியாகிய அன்னம்மாள் சுவாசரோகங்கண்டு காத்திரப் பிரகாரம் இறந்துவிட்டனள். இதனால் உபாத்தியாயர் பெரிதும் கலங்கினர். உபாத்தியாயருடைய குடும்ப கருமங்கள் முழுவதையும் அவர் மனைவியே இதுகாறும் நன்குபார்த்துவந்தவள். "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்றபடி தமது மனையாள் இருந்தகாலத்தில் இவருக்கு எவ்வகையானவேலையுமில்லாதிருந்தது. அன்னம்மாள் "வறுமையிற் செம்மை" என்றபிரகாரம் வீட்டுக்கருமங்களை நடாத்திவந்தவள். இப்பொழுது அவள் போய்விட்டாள். வீட்டுக்கருமமும் இவர் தலையிற்பொறுத்தது. உபாத்தியாயருடைய உள்ளத்தைப் பெரிதும் உபாதித்துவந்தது யாதெனில் தமது ஏகபுத்திரியாகிய சிவகாமசுந்தரி சிறுவயதிலே தாயில்லாப்பிள்ளையாய்விட்டாளேயென்ற எண்ணமேயாம். இக்குழந்தைக்குத் தாயிறக்கும்போது வயசு 6. தாயைப் பறிகொடுத்துக் கலங்கிய தமதுமகளை ஒருவாறுதேற்றித் தமது மனையாளின் அந்தியகருமங்களையும் முடித்துக்கொண்டு பழையபடி பள்ளிக்கூடத்துக்குப் போகத்தொடங்கினர். அவர் அதிகாலையில் எழுந்து தமது நித்தியகடன்களை முடித்துச் சமையல்செய்து தமது பிள்ளைக்கு அமுதூட்டித் தாமும் உண்டு குழந்தையையும் கூட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குச் செல்வார். சமைத்தல் முதலிய வீட்டுக்கருமங்களைச்செய்யும்போது உபாத்தியாயர் தன் மனையாளின் நினைவுதோன்ற உடனே கண்ணீர்விடுவார். இதற்கிடையில் தன் குழந்தை சமீபத்தில் வந்தால் உடனே தன் கண்ணீரைத்துடைத்து வேறுகதைகளைச் சொல்லுவார். தாம் கலங்குவதைக் கண்டாற் பிள்ளை அழுவாளென்று பயந்தே அப்படிச்செய்துவந்தார். சிவகாமசுந்தரி முதல் வகுப்புத் தொடக்கம் [...]ாகத் தந்தையுடன் சென்று பள்ளிக்கூடத்திற் படித்து வந்தாள். அவள் வளர வளர அவளுடைய கல்வியறிவும் வளர்ந்தது. வகுப்புகளிலும் உயர்ந்தாள், வீட்டுக் கருமங்களிலே தன் பிதாவுக்குப் பெருந்துணை புரிந்துவந்தாள். அப்புக்குட்டி உபாத்தியாயர் தமது புதல்விக்குப் பள்ளிக்கூடத்தில் ஊட்டும் படிப்போடு அமையாது, வீட்டிலும் பெரும்பான்மையும் இராக்காலங்களில் முதற்சைவவினாவிடை, இரண்டாஞ் சைவவினாவிடை, நாவலர் நான்காம்பாலபாடம், மூதுரை, பெரியபுராணவசனம், திருவிளையாடற்புராணவசனம் சைவசமயநெறி முதலிய நூல்களைப்பயிற்றிவந்தார்; திருவாதவூரடிகள் புராணத்திற்குப் பயன்சொல்லிக் கொடுத்துவந்தார்; தேவார திருவாசகங்களையும், பட்டினத்தடிகள் பாடல், தாயுமானவர் பாடல் புராணச்செய்யுட்கள் ஆகிய இவைகளையும் முறையே பண்ணோடும் இராகத்தோடும் ஓதும்படி தமது குழந்தைக்குப் பயிற்றிவந்தார். சிவகாமசுந்தரி கல்வியறிவிலும் கட்டழகிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினாள். அன்னையில்லையேயென்றகுறையன்றி அவளுக்கு வேறே துன்குறையில்லை. அன்னையில்லாக்குறையும் அவளுக்கு அதிகமாகத் தோற்றவில்லை, ஏனென்றால் அவளின் தகப்பனார் அவள் விஷயத்திலே தாயுமாக நடந்துவந்தார். சிவகாமசுந்தரி ஆறாந்தரத்திற்படித்துப் பரீட்சைமுற்றி ஏழாம்வகுப்பிற் படிக்க ஆரம்பிக்கும்போது மங்கைப்பருவமடைந்தாள்.

*   *   *

அப்புக்குட்டி உபாத்தியாயருக்குப் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப்போன மனைவியிறந்த சோகம் பழையபடி பெருந்துயராகமீண்டுவந்தது. "பிள்ளை பெரியவளானால், அவளை இந்தச் சமயத்தில் வேண்டிய ஆகாராதிகள் ஆக்கிக்கொடுத்துப் பரிகரித்தற்குப் பெற்ற தாயில்லையே, இனத்தவர்களில்லையே, ஆணாய்ப்பிறந்த நான் என்ன செய்வேன்; இவ்வளவு காலமும் என் குழந்தையை நான் போகும்போதும் வரும்போதும் என்னுடன் கூட்டிச்சென்றேன். இனி இத் தனிவீட்டில் என்குமர்ப்பிள்ளையை எப்படித் தன்னந்தனியே விட்டுச்செல்வேன். பள்ளிக்கூடத்துக்குப் போகாது நிற்போமென்றால் வயிறுவளர்க்க வழியில்லையே; ஆ தெய்வமே, என்னை ஏன் இப்படிச் சோதிக்கின்றாய்" என்று நினைத்தவுடன் அவர்கண்களினின்றும் நீர் ததும்பியது; தன்பிள்ளை கண்டவுடன் வருந்துவாளென்று அவர் கண்ணீரைத்துடைத்துக்கொண்டு அப்புறஞ்சென்று தான்பார்க்க வேண்டியவீட்டுக்கருமங்களைப்பார்த்தார். தமக்கு ஒரு வாரத்துக்கு விடுதலைதருதல் வேண்டுமென்று பாதிரியாருக்குக் கடிதமெழுதிப் பெற்றுக்கொண்டார். இதுகாறும் விளையாட்டுப்பிள்ளைபோலக்கிலேசமின்றித் திரிந்த சிவகாமசுந்தரிக்கும் இப்பொழுது அளவில்லாக் கவலை தலைப்பட்டது. என்செய்வாள் பாவம்! பெற்ற பிதாவானாலும் தன்குறைகள் எல்லாவற்றையும் பிதாவிடம் சொல்லிக்கொள்ள மாட்டாள். "அன்னையில்லாப்பிள்ளையிருப்பது அவம்" என்ற ஆன்றோர் வாக்கும் இடையிடையே அவளுக்கு ஞாபகம் வந்தது. சுருங்கச்சொல்லுகில் மகளையறியாது தகப்பனும் தகப்பனையறியாது மகளும் அன்னம்மாள் இல்லாமையையிட்டுப் பெரிதும் வருந்தினர்.

*   *   *

நல்லசிந்தையுடையவர்களுக்குப்பெரும் இடைஞ்சல்வரக் கடவுள் விடமாட்டார். ஆனால் மற்றவர்களுக்குத் தெய்வந்துணையென்று அறிவுடையோர் சொல்வர். தீயசிந்தையில்லாத்தந்தையையும் புதல்வியையும் இவ்வாறு பலநாள்வருந்தக் கடவுள் விடவில்லை. உபாத்தியாயர் வீட்டிற்கு இரண்டு வீடுகளுக்கப்பால்—ஏறக்குறைய ஒரு கூப்பிடுதூரத்தில் என்று சொல்லலாம். பறுவதத்தம்மாள் என்று ஒரு மனுஷி வசித்தாள். அவள் இவ்விருவருக்கும் தூரித்த இனத்தவள். பறுவதத்தம்மாளுடைய ஏகபுத்திரி சிங்கப்பூரில்வசிக்கும்போது சிலமாசங்கட்கு முன்னர் பிரசவகாலத்தில் குழந்தையோடு இறந்துவிட்டாள். அச்சமாச்சாரம் பறுவதத்திற்கு பேரிடி வீழ்ந்தாற்போலிருந்தது. அன்றுதொடக்கம் பறுவதம் தன்னந்தனியே கவலையோடு கூடியவளாய் வசித்துவந்தவள். என் அன்புடைய ஒருமகளும் இறந்துவிட்டாள். இனி நான் இருந்தாவதென்ன என்ற எண்ணம் பறுவதத்திற்கு உண்டாய்விட்டது. அவளுக்கும்வேறு நெருங்கிய உறவினரில்லை. பறுவதம் நல்ல மனசு உடையவள், வாய்மாத்திரம் கொஞ்சம் கடுமை. தலைநரைத்து முகந்திரைத்து பற்கள் கழன்று உடம்புதழன்றபின்னும் அவளை யாராவது பாட்டி என்று அழைத்தால் அவளுக்கு அது அதிகம் பிடிக்காது. சிறுபிள்ளைகள் தாமும் "அக்கா" என்றழைத்தாற்பறுவதத்தம்மாளுக்கு ஆனந்தமாகும். யாராயினும் "பறுவதம், உனக்கு வயசு என்ன" என்று வினவினால் "ஆடி முடிய 39 வயது முடிந்து நாற்பதுவயசு நடக்கப்போகிறது" என்று எப்பொழுதும் சொல்வாள், இப்படிப் பத்துவருடகாலமாக 39 வயசு முடியாமலும் நாற்பது தொடங்காமலுமிருந்தன. இரண்டுவருஷகாலத்திற்குப்பின்பே ஒரு வயசு பூரணமாகுமென்பது பறுவதத்தின் கொள்கை போலும். யாராயினும் வேடிக்கையார்த்தமாக "என்ன தங்கச்சி உனக்குத் தலையும் நரைத்து முகமும் திரைத்துப் பல்லும் விழுந்துபோய்விட்டது, நீ முந்தைநாட் பொடிச்சிதானே" என்று சொல்லிவிட்டால், பறுவதத்திற்கு உண்டாகும் ஆநந்தத்திற்கு எல்லை காண்பது அரிது "ஐயோ, அதை ஏன் பேசுவான்; அவர் இருக்கிறபொழுது பாழ்படுவான் ஒரு பரியாரி பாஷாணஞ்சேர்ந்தமருந்தொன்றை எனக்கு ஒரு மண்டலத்திற்குத் தின்னத்தந்து என்கதி இப்படியாய்ப் போய்விட்டது" என்று சமாதானஞ் சொல்லுவாள். பறுவதத்தில் இந்தவயசுப்பைத்தியமும் சிறிது வாய்காட்டுங் குணமுமல்லாமல் வேறு தீமைகள் ஒன்றுமில்லை.

*   *   *

தனக்கு அன்னம்மாள் சகோதரிமுறையென்றும் ஆனதனால் அப்புக்குட்டிச்சட்டம்பியார் மைத்துனரென்றும் மைத்துனர் இருக்கிறவீட்டிற்குத் தான் போவது சரியல்லவென்றும் சொல்லிப் பறுவதம் அன்னம்மா இறந்தபின்னர்ப் பலவருஷங்களாக அங்குச்செல்லாதிருந்தனள். அப்புக்குட்டி உபாத்தியாருக்குப் பதினைந்து வயசிற்குப் பறுவதம் மூப்பென்று சொல்லலாம். தன்னை எப்பொழுதும் யௌவனமான பெண்ணென்று மதித்திருக்கும் பறுவதத்தம்மாளுக்கு யாதுசொல்வது. இருந்தாலும் சிவகாமசுந்தரி மங்கைப்பருவமடைந்துவிட்டாள் என்ற செய்திகேட்டவுடன் பறுவதம் அங்குச்சென்றிருந்தாள். அவளைக்கண்ட சிவகாமசுந்தரி தன் தாயைக்கண்ட அளவு மகிழ்ச்சியடைந்தாள். பறுவதமும் சில காலத்திற்குமுன் தன் ஒரே மகளையிழந்தவளானபடியால் இப்பிள்ளையைத் தன்மகள்போலப்பாவித்து வந்தாள். அப்புக்குட்டி உபாத்தியாயர் பாடசாலைக்குப் போய் வரும்வரைக்கும் பறுவதம் சிவகாமசுந்தரியோடுதான் இருப்பாள். இப்பொழுதும் அப்புக்குட்டிஉபாத்தியாயரைக்கண்டால் பறுவதம் மறைபாது விடுவதில்லை (வரும்.)

## நமது பத்திரிகாபிமானிகட்கு ஒரு விசேஷ விஞ்ஞாபனம்.

அபிமானம்பூண்ட அன்பர்காள்,

இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களின் பொருட்டுத் தங்களால் வரவேண்டிய கிரயத்தை அறவிடுதற்கும், பத்திரிகாபிமானிகளைப் புதிதாகச் சேர்ப்பதற்கும் அதிகாரங் கொடுத்து நமதுஇந்துசாதனப் பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களையனுப்புகின்றேம். இவர் கொழும்பு, காலி, கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டி, குருணக்கல், அனுராசபுரம் முதலிய இடங்கட்குச் செல்வர். பத்திரிகாபிமானிகளாயுள்ள நீவிர் யாவரும், அவர் உங்களிடம் வருஞ்சமையத்தில் உங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தை முற்றுகக் கொடுத்து அவர் தரும் பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்வதுடன் புதிய அபிமானிகளையுஞ் சேர்த்துக்கொடுத்து இன்னும் ஆகவேண்டிய வசதிகளையுஞ் செய்வீர்களென எதிர்பார்த்திருக்கின்றேம்,

இங்ஙனம்,
தங்கள் அன்பன்
ச. அம்பிகைபாகன்
மானேசர்.

9-4-25.

## சமாசாரம்

### காலநிலை.

சென்றசெவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் இங்கு நல்லமழை பெய்தது. இன்னும் மழைக்கோலங் காணப்படுகின்றது.

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

குரோதனவருட விடுமுறைபெற்றுள்ள இக் கல்லூரி இந்தமாதம் 29-ந்வ (11-5-25) திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

### வன்னிக்குடியேற்றம்.

இக்குடியேற்ற விஷயமாக ஓர் விசேஷகூட்டம் நாளை (வெள்ளிக்கிழமை) பிற்பகல் நாலு மணியளவில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் கௌரவ ஸ்ரீ வை. துரைசுவாமியவர்கள் அக்கிராசனம் வகிப்பர்.

### புகைரதப் பிரயாணிகளின் வசதி.

புகைரதப் பிரயாணஞ் செய்வோருடைய வசதிக்காகப் புகைரதவண்டிகளிலே அவ்வவ் ஸ்தானங்களின் பேரைத் தமிழ் சிங்களம் ஆங்கிலம் என்னும் மூன்று பாஷைகளிலும் எழுதி வைப்பதற்குப் புகைரதப் பகுதியார் நோக்கங் கொண்டிருக்கின்றனர்.

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதியாகிய மிஸ்ரர் G. W. உவூட்ஹவுஸ் அவர்கள் விடுமுறை பெற்றுச் சென்றனர். கௌரவ சேர். அ. கனகசபையவர்கள் சென்ற ஏப்பிரல்மாதம் 27-ந்வ தொடக்கம் டிஸ்திறிக் நீதிபதியாகக் கடமைபார்க்கின்றனர்.

### விசேஷ கொண்டாட்டம்.

யாழ்ப்பாணம் மேற்குச் சைவமாணவ சபை நிதியின்பொருட்டு ஒரு விசேஷ கூட்டம் இந்த மாதம் 27வ (9—5—25) சனிக்கிழமை மாலை ஆறுமணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் இந்திய மகாஜனசபைக்கூட்டம் மிகவும் சிறப்பாக நடித்துக் காட்டப்படும்.

### புதிய தபாற்கந்தோர்கள்.

தபாற்கந்தோர் சமீபமாயில்லாத இடங்களிலே தபால் ஏற்கும் கந்தோர் அமைப்பதற்கும், ஆவசியகம்வேண்டிய சில இடங்களில் அமைக்கப்படும் உதவிக்கந்தோரில் பதிவுகடிதங்கள் ஏற்பதற்கும், தந்திகளைப்பெற்றுச் சமீபத்திலுள்ள தந்திக்கந்தோருக்கு அனுப்புவதற்கும் தபாற்கந்தோர்ப்பகுதியார் கொண்டுள்ள நோக்கம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. தபாற்கந்தோர், உதவிக்கந்தோர் தபாற்பெட்டி என்னுமிவற்றை ஆவசியகம் வேண்டியிருக்கும் இடங்களில் வசிப்போர்க்கு இது ஒரு அரியதருணம்.

### விவாகம்.

நிகழும் சித்திரைமீ 26-ந்வ (9-5-25) சனிக்கிழமை இரவு 11 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில், காரைநகரைச் சொந்தஸ்தானமாகவுள்ளவரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியருள் ஒருவருமாகிய ஸ்ரீ க. நமசிவாயமவர்களுக்கும் காரைநகர் ஸ்ரீ. சி. ஆறுமுகமவர்களின் புத்திரி சௌபாக்கியவதி சிவகாமிப்பிள்ளைக்கும் விவாகம் சிறப்பாகநடைபெறும்.

—நிகழும்சித்திரைமாதம் 31-ந்வ (13-5-25) புதன்கிழமை இரவு 9 மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் மட்டக்களப்பிலே யாழ்ப்பாணம் கொம்மேர்ஷல் கோப்பேசனில் உத்தியோகம் வகித்திருப்பவரும், தலையாளி ஸ்ரீ. அ. துரையப்பா அவர்களின் புத்திரருமாகிய ஸ்ரீ. அ. இராசநாயகமவர்களுக்கும் கந்தர்மடம் ஸ்ரீ. அ. முத்துக்குமாரு அவர்களின் புத்திரிக்கும் விவாகம் சிறப்பாகநடைபெறும்.

### உபந்நியாசம்.

நுணாவில் கிழக்கு அபிராம்பிகை சைவ மத்திய கலவன்பாடசாலையில், குரோதனவருடம் சித்திரைமாதம் 20-ந்வ (2-5-25) இரவு 7 மணி தொடக்கம் ஸ்ரீமதவிபுலாநந்தசுவாமியவர்கள் மாணிக்கவாசகசுவாமிகள் பாடியருளிய திருச்சதகத்தின் பொருளைச் "சிவபத்தி வைராக்கிய விசித்திரம்" என்னும் விஷயமாகக் கொண்டு நீடித்த உபந்நியாசஞ்செய்தனர். அத்தருணம் பிரமஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதிஅவர்களும் ஸ்ரீ. ச. பொன்னம்பலம் அவர்களும் ஆசிப்புரைகூறினர். பின்னர் ஸ்ரீ. மா. பீதாம்பரபிள்ளை அவர்கள் சபையோருக்குத் துதிகூற, தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

சடிந.

### பூகம்பம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவும் திங்கட்கிழமை இரவும் 3000 மைல் தூரத்திற்கப்பாற் பூகம்பம் நிகழ்ந்ததெனக் கொழும்பிலுள்ள சோதிடோப்பரிசை தெரிவிக்கின்றது.

### ஒருபுதினம்.

பாணந்துறையிலுள்ள ஓர்ஏழைப்பெண் மூன்று கண்ணும் இரண்டு மூக்கும் இரண்டுதலையுமுள்ள ஒரு குழந்தையைப் பெற்றனள். அக்குழந்தை உயிருடனிருக்கிறதென்று அறியலானேம்.

### தீவிபத்து.

சென்ற சனிக்கிழமை பிற்பகல் கொலனாவையிலுள்ள மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களில் நெருப்புப்பற்றியமையினால் அங்குவேலை செய்துகொண்டு நின்ற எண்மர் படுகாயப்பட்டுக் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டனர். அவர்களுள் ஐந்துபேர் இறந்தனர்.

### ஒருகுழந்தை இரண்டரை ருபாவுக்கு விலைப்பட்டது.

கொழும்பு வைத்தியசாலையிலே சில நாட்களுக்குமுன் ஒருகுழந்தையைப் பிரசவித்த ஒரு பெண் சென்ற ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து புறப்பட்டுவெளியே சென்றவுடன் தன்வறுமை காரணமாக அதனை இரண்டரைருபாவுக்கு விற்றனள்.

### சாதிச்சலிசடை.

சென்றவாரம் குருநாக்கலைச் சேர்ந்த தாலம்பிட்டி என்னும் கிராமத்திலே பென்னு என்னும் வண்ணனொருவனுடைய வீட்டில் ஓர் கொண்டாட்டம் நடந்தது. அவனுடைய பெண்பிள்ளைகள் இருவரும் சட்டை அணிந்திருந்தமை அங்குள்ள துரையா வகுப்பினர்க்குத் திருப்தியில்லாதிருந்தது. துரையாச் சாதியினர் கோபங்கொண்டு அவ்வண்ணனுடைய வீட்டினுட்புகுந்து கலகமிட்டு அப்பெண்கள் அணிந்திருந்த சட்டைகளைக்கிழித்து, கிரிமுத்லா என்னுமொருவனைக்கொலைசெய்தனர்; சமரா என்னுமொருவனைப் படுகாயப்படுத்தினர். எதிரிகள்மீது வழக்குத்தொடரப்பட்டிருக்கிறது.

### வெள்ளவத்தைத்திருத்தறட்பயிற்சிக்கழகம்.

இக்கழகத்துக்குரிய புதியவருட அங்கத்தவரைத் தெரிவுசெய்யும் பொருட்டு ஓர் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை டிை கழகமண்டபத்திற் கூடியது. சிலபிரமாணங்கள் திருத்தியும் சேர்க்கப்பட்டும் முடிந்தபின் ஸ்ரீ ஆர். தம்பிராசா அவர்கள் சபாநாயகராகவும், ஸ்ரீ டீ. சுப்பையாபிள்ளையவர்கள் உபசபாநாயகராகவும், ஸ்ரீ ஏ. கனகசபாபதியவர்கள் காரியதரிசியாகவும், ஸ்ரீ த. இரகுநாதனவர்கள் உதவிக் காரியதரிசியாகவும், ஸ்ரீ வீ. கயிலாசபிள்ளையவர்கள் தனாதிகாரியாகவும், ஸ்ரீ எம். வயிரவப்பிள்ளையவர்களும் ஸ்ரீ எஸ். நாகரத்தினமவர்களும் கூட்ட அங்கத்தவர்களாகவும் நியமனம் பெற்றனர்.

### மோட்டர்பஸ் ரிறம்வண்டிகளின் பிரயாணக் கிரயம் குறைக்கப்பட்டமை.

கொழும்பிலே சென்ற சிலகாலமாக மோட்டர்பஸ்வண்டிகள் அதிகமாயின. இதனாற் புகைரதவருவாயும் ரிறம் வண்டிவருவாயும் மிகக்குறைந் து. றிக்சோவண்டிகளைத் தேடுவாரிலர். இத்தப்பஸ் வண்டிகள் கொழும்பிலுள்ள எந்தச் சிறுதெருவிலும் ஆங்காங்குள்ள வீட்டுவாயில்களிலும் மலிந்து பொலிந்து நிற்கின்றன. கொழும்பிலே கருமம்பார்க்கும் எவர்க்கும் இத்தப்பஸ்வண்டிகளால் உண்டான வசதிபோல முன் எக்காலத்தும் எதனாலும் உண்டாகவில்லை. அங்குள்ள ரிறம் வண்டிப்பகுதியாருக்கும் மோட்டோர்பஸ்வண்டிச் சொந்தக்காரராகும் செட்டிநிக்கோ சமுதாயத்தாருக்குமிடையில் பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் விஷயமாக மனஸ்தாபமுண்டாயது. வழக்கமாக முதலாம் வகுப்புக்குப் பத்துச் சதமும் இரண்டாம் வகுப்புக்கு ஐந்துசதமும் விதித்துள்ள ரிறம்வண்டிப்பகுதியார் சென்ற சனிக்கிழமை தொடக்கமாக முதலாம்வகுப்புக்கு ஐந்துசதமாகவும் இரண்டாம்வகுப்புக்கு மூன்றுசதமாகவும் பிரயாணக்கிரயத்தைக் குறைத்திருக்கின்றனர். மோட்டர்பஸ்வண்டிப் பகுதியாரும் நாலுசதமாக்கிக்கொண்டார்கள். ரிறம் வண்டிப்பகுதியார் இன்னமும் கிரயவிகிதத்தைக் குறைப்பார்கள்போலத் தெரிகின்றதாயினும் இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கும் இந்த விகிதத்தாலும் சிலையாருமோவென்பது சந்தேகம். அங்ஙனம் சிலையாருமேல் அது அங்குள்ளார்க்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

### சைவசித்தாந்தமகாசமாஜம்.

இச்சமாஜத்தின் இருபத்தோராம் வருடாந்தக்கூட்டம் மல்லாகம் சைவ ஆங்கிலவித்தியாசாலையில் இந்தமாதம் 26-ந்வ (8 5 25) வெள்ளிக்கிழமையாகிய நாளைப்பிற்பகல் மூன்றுமணியளவில் ஸ்ரீமத். த. கயிலாசபிள்ளையவர்களுடைய அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் ஆரம்பமாகி அடுத்த சனி ஞாயிறென்னும் இருதினங்களிலும் நடைபெறும். அத்தினங்களில் யாழ்ப்பாணத்துள்ள அறிஞர்பலரால் உபந்நியாசங்கள் நடைபெறும். பிரசாரகருடைய நாமமும் விஷயமும் பின்வருமாறு:—

வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்றுமணிக்கு டிை சமாஜம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாகும். அக்கிராசனருக்கு உபசாரப், அறிக்கைப்பத்திரம் வாசித்தல், அக்கிராசனர் முகவுரைப்பிரசங்கம் என்னும் இவைகள் நிறைவேறியபின் பிரமஸ்ரீ. சி. கணேசையரவர்கள் "திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சரித்திர ஆராய்ச்சி" ஸ்ரீ. சி. சுவாமிநாதனவர்கள் (சாவகச்சேரி) "மனிதர்கடமை" ஸ்ரீ. மா. சுப்பிரமணியமவர்கள் (நியாயதுரந்தரர்) "நல்வழி" ஸ்ரீ. சு. சிவபாதசுந்தரம்பிள்ளையவர்கள் "சைவக்கிரியைகள்," எஸ். ஆர். இராசரத்தினமவர்கள் (நியாயதுரந்தரர்) "சைவம்", திரு. சோமசுந்தரமவர்கள் (இராமநாதன்கல்லூரி) "ஒழுவு", ஸ்ரீ. ஐ. அருளானந்தசிவமவர்கள் (ஏழாலை) "சைவசித்தாந்தம்", ஸ்ரீ. செ. கனகசபாபதிப் பிள்ளையவர்கள் (வேலணை) "சாதுசங்கம்", ஸ்ரீ. ச. பொன்னம்பலமவர்கள் (இராமநாதன்கல்லூரி) "புருடார்த்தம்", என்னும் விஷயமாகப்பிரசங்கம் செய்வார்கள். பின்னர் அக்கிராசனர் முடிவுரைகூறியபின் தேவாரபாராயணத்துடன் இரவு ஒன்பதரை மணிக்குக் கூட்டம் சமாப்தியாகும்.

2-ம் நாட் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக்கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாகும். பின்னர் பிரமஸ்ரீ. சா. குமாரசுவாமிக்குருக்களவர்கள் (மாவிட்டபுரம்) "ஆலயவழிபாடு", பிரமஸ்ரீ. சி. முருகேசையவர்கள் (வண். சைவப்பிரகாசவித்தியாசாலை) "விரதம்", ஸ்ரீ. வி. மயில்வாகனமவர்கள் (உரும்பராய்ச் சைவ ஆங்கிலவித்தியாசாலை) "சிவசின்னம்", ஸ்ரீ கே. தம்பையாஅவர்கள் (பிறக்ரர் தெல்லிப்பழை) "அத்துவிதம்", ஸ்ரீ. வீ. குமாரசுவாமியவர்கள் (பிறக்ரர் தெல்லிப்பழை) "சங்கமும் சமயமும்", ஸ்ரீ. மு. சபாரத்தினசிங்கமவர்கள் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தலைமை ஆசிரியர்) "சைவசித்தாந்தக் கொள்கையும் தற்கால அங்கீகரிப்பும்", ஸ்ரீ. வி. முத்துக்குமாரு அவர்கள் (தெல்லிப்பழை) "சமயபரிபாலனம்", ஸ்ரீ. ச. இளையதம்பியவர்கள் (மானிப்பாய் இந்துக்கல்லூரி) "சிவபுண்ணியம்", ஸ்ரீ. சி. ஆறுமுகமவர்கள் (கொத்தாரிசுகீர்வேலி) "புராணம்", பிரமஸ்ரீ. ந. கே. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள் (காங்கேசன் துறைச் சைவ ஆங்கிலவித்தியாசாலை) "வேதாகம ஆராய்ச்சி", ஸ்ரீ. அ. க. வைத்தியலிங்கமவர்கள் (இணுவில்) "திருமுறைப்பெருமை", ஸ்ரீ. ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) "அடியார் பெருமை", என்னும் விஷயமாகப் பிரசங்கம் செய்வார்கள். அக்கிராசனர் முடிபுரை கூறியபின் தேவாரபாராயணத்துடன் இரவு ஒன்பதரைமணிக்குக் கூட்டம் சமாப்தியாகும்.

3-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குத் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாகும். சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்தராஜயோகிகள் "தீக்ஷாசமஸ்காரம்", ஸ்ரீ. கு. கனகசபையவர்கள் (சிறுப்பிட்டி) "ஆகமம்", ஸ்ரீ. கா. அருளம்பலமவர்கள் (நியாயதுரந்தரர்) "ஜீவகாருண்ணியம்", ஸ்ரீ. அ. விசுவநாதரவர்கள் (டிப்பியூற்றி பிஸ்கால்) "பதிபசுபாசம்", பிரமஸ்ரீ. இ. சி. இரகுநாதையரவர்கள் (சோதிடபரிபாலன மடம்) "சோதிடசித்தாந்தம்" ஸ்ரீ. செ. மயில்வாகனமவர்கள் (யாழ்ப்பாணம் வைத்தியசாலை) "சாதனம்" பிரமஸ்ரீ. நவநீதகிருஷ்ணபாரதியவர்கள் (பரமேசுவரக் கல்லூரி) "தமிழும் கல்வி கற்பிக்கும் முறையும்", உயர்திரு உருத்திர கோடீஸ்வரசுவாமிகள் "திருவள்ளுவர் சமயம்", ஸ்ரீ. பி. கே. சோமசுந்தரமவர்கள். (பிறக்றர் தாவடி) "கல்வி", ஸ்ரீ. வே. மாணிக்கவாசகரவர்கள் (பிறக்றர், கொக்குவில்) "தமிழ் நாடும் சமயமும்", என்னும் விஷயமாகப் பிரசங்கம் செய்வார்கள். பின்னர் அக்கிராசனர் முடிபுரையும் வந்தனோபசாரமும் கூறப்பட்டுத் தேவாரபாராயணத்துடன் இரவு ஒன்பதரை மணிக்குக் கூட்டம் சமாப்தியாகும்.

### தேகவியோகம்.

வண்ணார்பண்ணை முதலியார் இ. கந்தையா அவர்களின் பதினன்கு வயதுப் புதல்வர் காத்திராப்பிரகாரம் நேர்ந்த நோய் காரணமாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை தேகவியோகமாயினரென்றும் துக்க சமாசாரத்தை அறியலானேம்,

## இந்திய சமாசாரம்.

### சேர் பி. தியாகராசச் செட்டியாரின் தேகவியோகம்.

தென்னாட்டுத் தலைவர்களில் ஒருவராகிய சேர் பி. தியாகராசச் செட்டியாரவர்கள் சென்ற ஏப்பிரல்மீ 28வ தேகவியோகமாயினர்.

### திருச்சிக் கத்தோலிக்கரின் சாதிபேதம்.

சென்ற ஏப்பிரல்மீ 14வ திருச்சிநப்பள்ளியிலே சாதிக்கத்தோலிக்கரின் கூட்டமொன்று கூடியது. அங்கு ஆதிதிராவிடரெனச் சொல்லப்படுவோர்க்குப் பிரத்தியேகமான இடம் வகுக்கப்படவேண்டுமென்றும், கொடுக்கப்படும் தேவநற்கருணை சாதிக்கத்தோலிக்கருக்குக் கொடுக்கப்பட்ட பின்பே மற்றவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இத்தீர்மானத்தை அங்குள்ள கத்தோலிக்க சபையும் அங்கீகரித்திருக்கின்றதெனத் தேசபக்தன் கூறுகின்றது.

### நீதிஸ்தலத்திற் கொலை.

சிலநாட்களுக்கு முன் நாகப்பூரிலே ராம்சாரன் என்னுமொருவனுடைய வீட்டில் ஆயிரம் ருபா பெறுமதியான பொருள்களும் அவனுடைய மனைவியும் திருடப்பட்டமைகாரணமாக ராம்சாரன், ஜாக்டியோ என்னும் ஒருவர்மீதும் வேறும் ஐந்துபேர்மீதும் வழக்குத்தொடர்ந்தனன். டிை வழக்கு விசாரணையின் பொருட்டு இருபகுதியாரும் அவ்வூர்க் கோட்டிற் சமுகமாயினர். நீதிபதி விசாரணையை ஆரம்பிப்பதற்குமுன் ராம்சாரனுக்கும் ஜாக்டியோவுக்கும் வாக்குவாதமுண்டாயது. ராம்சாரன் தன்னிடத்துள்ள கத்தியினால் ஜாக்டியோவைக் குற்றிக்கொன்றபின், பொலீசர் கையிலகப்படாது வெளியே ஓடிச்சென்று தற்கொலை செய்துகொண்டனனும்.

### பிராயச்சித்தப்பலன்.

டெக்காவைச்சேர்ந்த சிரிப்பூர்ப் பொலிஸ் தானத்திலிருக்கும் ராமதாஸ் என்னுமொருவன் ஒரு பசுவை அதிக ஆதாயத்துடன் விற்றமை காரணமாக அவனுடைய சாதியார் அவனைச் சாதிப்பிரஷ்டம் செய்தனர். அவன் தன்னுடைய நண்பர்சிலருடைய கேள்விப்படி பிராயச்சித்தம் செய்துகொள்ளவும் சம்மதித்தான். அங்குள்ள புரோகிதர் ஒருவர் பிராயச்சித்தச்செலவுக்கு ஆறுருபாவேண்டுமென்றனர். அவன் அதிக ஏழையானமையினால் ஐம்பது ருபாகொடுக்கச் சம்மதித்தான். புரோகிதர் பணம்போதாமையினால் மறுத்துவிட்டார். அவனுடைய சாதியாரும் அவனை அதிக இடர்ப்படுத்தத் தொடங்கினார்கள். அவன் அவர்களின் அக்கிரமத்தைச் சகிக்கலாற்றுது தன் குடும்பத்துடன் மகமதிய மதப்பிரவேசம்செய்தனன். நமது இப்புரோகிதர்களே அந்நிய மதவிருத்தியின் பொருட்டுச் சிரமப்பட்டு உழைப்போராவர். இவர்கள் புரோகித உத்தியோகம் வகிப்பதிலும்பார்க்க எமக்குக் கெடுதியை விளைப்பது வேறொன்றுமில்லையாம்.


## உங்கள் உணவின் உருசி.

சமையல்பாகத்திற் கெட்டுப்போகாமலிருக்க எப்பொழுதும் பிரக்கியாதிபெற்று விளங்கும்

ருக்மணி குக்கர்

சமையல் அடுக்கில் சமையல் செய்யுங்கள். சாதமும் 4, 5 பதார்த்த வகைகளும் இரண்டு முதல் எட்டுப்பேருக்கு, ஒரேமணி நேரத்தில் சொற்ப செலவில் தொந்தரவில்லாமலே தயாரிக்கலாம். உணவின் உருசியும் சத்தும் நிறைந் திருக்கும். மாணவர் பிரயாணிகள் முதலியோருக்கும், வீடுகளுக்கும், தனித்தவர்களுக்கும் உபயோகம். விலை 18 ருபாமுதல் 33 வரை. ஜாபிதா இனும்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(H) இராயபுரம்,
(Y. 45.) சென்னபட்டினம்.

"ஸ்ரான்டேர்ட்"
## கொழுக்கியோடுகள்.
**(Standard Tiles)**

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இச்சஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வடஇலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்த ஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச்சென்ற நாலு வருடகாலமாக நாம் தருவித்துவிற்றுவருகின்றேம். இந்தநாலு வருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்கவிதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்ததென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றாகும்.

S. வீரசத்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
(H. 34.) யாழ்ப்பாணம்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டனைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் வண்கிழக்கு செ. நா. செ சாமிநாதஞ் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| நம். | 1924ஆ. பிவரவரி௴ வ. | ருபா | ஊரும் பெயரும் | நகை விபரம். |
|---|---|---|---|---|
| 2269 | 14 | 50 | வண்மேற்கு வே. செல்லையா, | பொன் கீம்பிப்புராணட்டியல் 1 |
| 2278 | 15 | 20 | நாவடி அ. சிவகடாக்ஷ அய்யர், | பொன் சம்பி 1, அரும்புத்தடை 2 |
| 2338 | 21 | 190 | வயாவிளான் வ. அந்தோனிப்பிள்ளை, | பொன் தாலிக்கொடி 1 |
| | மார்ச்சு௴ | | | |
| 2426 | 1 | 17 | நல்லூர் அ. சின்னையா, | சிவப்புக்கல் தோடு சோடி 1 |
| 2477 | 6 | 20 | சண்டிக்குளி ஆ. வைத்தியலிங்கம், | பொன்முரப்பில்லாத பின்னைக்காப்பு சோடி 1 |
| ,, | ,, | ,, | | கம்பிப்புராணட்டியல் 1 |
| 2484 | 7 | 20 | கலாபூர் சி. வயிரமுத்து, | கொட்டோலை சோடி 1 |
| 2488 | 7 | 43 | சோனகதெரு மு. சாகுல்மீது, | பொன் கம்பிப்புராணட்டியல் 1 |
| 2489 | 7 | 45 | ,, | பொன் 1 பட்டு மணிக்கோர்வை 1 |
| 2516 | 9 | 520 | சங்கானை சி. நாகமணி, | பொன் பிரன்சுக்காசு 60-ம் அமெரிக்கன் டலர் 1, கோத்தமாலை 1 |
| 2529 | 10 | 55 | கொக்குவில் மு. நாகலிங்கம், | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 2531 | 10 | 175 | வண்கிழக்கு வே. க. ராசரத்தினம், | பொன் இரண்டுபட்டுக் குண்டுச்சங்கிலி 1 கைச்சங்கிலி சோடி 1 |
| 2535 | 10 | 160 | சோனகதெரு மு. சேகுமுகம்மது, | பொன் பதக்கத்துடன் செட்டிப்புராணட்டியல் 1 |
| 2537 | 10 | 55 | வண்கிழக்கு சி. கந்தையா, | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 2546 | 11 | 50 | சண்டிக்குளி ச. சவுரிமுத்து, | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 2556 | 12 | 600 | சங்கானை சி. நாகமணி, | வயிரக்கல் ஒவ்வொன்றுவைத்த தோடுசோடி 1 |

விற்பனவு:—குரோதன௵ வைகாசி௴ 3-ந் திகதிக்குச்சரியான 1925ஆ. மே௴ 16உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகேங்கலாக மிகுதி ஷெ கடைத்திண்ணையில்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்கிழக்கு அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 642.)

---

## புதிய திணுசுகள் சகாய விலைகள்
### நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னூடு, காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய திணுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல்சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் திணுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y. 39).

---

## சேலம் ஜவுளி தினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.)

---

## ரீஜுபந்த்

பிரபஞ்ச சுகந்தீந்த திவ்விய ஔஷதம்! 2 மணிநேரத்தில் அபூர்வ குணம்!!

இந்த மருந்து இராத்திரிவேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதைக் கெட்டிப்படுத்தி 2 மணி நேரத்திற்குள் அதிகமான ரதி சக்தியைக் கொடுக்கும்.

மூன்று நாள் சாப்பிட்டால் வீர்ய நஷ்டம் எவ்வளவு காலமாக இருந்தபோதிலும் அதைத் தவறுமல் கட்டுப்படுத்தும் இரண்டு புட்டிகள் சாப்பிட்டால் தாப்யாஸத்தினு லுண்டாகும் நபும்ஸகத்வம் போக்கி நரம்புகளுக்கு அதிக பலத்தைக்கொடுத்து அதிகமான யௌவனத்தைக் கொடுக்கும். ஒருமுறை தருவித்து உபயோகித்தால் இதன் குணம் தங்களுக்கே தெரிய வரும். கடிதங்கள் ரகஸ்யமாய் வைக்கப்படும். 20 மாத்திரைகள் கொண்ட சீசா 1-க்கு ரூபா 2—0—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு.

ஆர்ய வைத்தியாஸ்ரமம்,
13. (H) பைராகிமடம் கோவில்வீதி,
ஜி. டி. மதராஸ்.

(Y. 33)

---

## சரீர மர்ம சாஸ்திரம்

படிக்கப் படிக்க இனிக்கும்!
நினைக்க நினைக்க மணக்கும்!!

தமிழ்ப்பாஷையில் இவ்வளவு பூரணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்படவில்லை. இதில் ஸ்திரீ புருஷலக்ஷணங்களும், அவர்களது சரீர அமைப்பும் அவர்களின் நேர்மையான உபயோகங்களும், ரதிமன்மத சிருங்கார ரஹஸியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்தி விவரமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகா ரிஷிகளால் மர்பமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும் விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்துகொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 படங்களுடன் சுமார் 200 பக்கங்களுடைய 4-ம் பதிப்பு புத்தகம் விலை ரூ 1 தபால் செலவு அணு 0—7—0

மாணிக்க விலாசம் பிரஸ்,
12, அருணசல முதலி வீதி, சென்னை

(Q. 62)

---

## தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள், நீழம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன, கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன, நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினுல், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானுறு,

தந்திவிலாசம்
அ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37)

---

## தங்க மலாம் பூசிய ரிஸ்லெட் கெடியாரம்.



இந்த கெடியாரம் பாவைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றும். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான டைம் காட்டக்கூடியது. வெகு காலம் நன்றுப் போகக்கூடியது.

பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கில்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8-0.

ஸ்ட்ரேட் செடல்மெண்டுக்கும் F. M. S. மலையாஸ்ட்ரேட்டும் முன்பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—கனக அண்டு கம்பேனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

(H. 35)

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறுர்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினு முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
சு. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

---

## இனும்! விலை ஜாப்தா. இனும்!!
## பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தர்பார்வத்தி | சேர்1க்கு | ரூ.10 | முதல் | ரூ.24 | வரை. |
| அம்பர்வத்தி | ,, | 3 | ,, | 18 | ,, |
| கஸ்தூரிவத்தி | ,, | 4 | ,, | 12 | ,, |
| பால்வத்தி | ,, | 8 | ,, | 16 | ,, |
| ஜவ்வாதுவத்தி | ,, | 4 | ,, | 10 | ,, |
| புனுகுவத்தி | ,, | 3 | ,, | 6 | ,, |
| பன்னீர்வத்தி | ,, | 1 | ,, | 4 | ,, |
| மத்தாப்புவத்தி | ,, | 1 | ,, | 3 | ,, |

### மைசூர் வாசனை வில்லைகள்.

கஸ்தூரிவில்லை, கேசரிவில்லை, ஜவ்வாது வில்லை, புனுகுவில்லை, புதக்கோட்டைவில்லை, பச்சைவில்லை. கிரயம் வில்லை 1க்கு 0-8-0 முதல் 1-0-0, 1-8-0, 2-0-0, 2-8-0, 3-0-0, 4-0-0, 5-0-0 வரை.

### அரகஜா
(ஜவ்வாதுகலந்த சந்தனம்.)

தோலா 1-க்கு ரூபா 2-0-0 முதல் ரூபா 3-8-0 வரை.

### தசாங்கம்.

சேர் 1-க்கு ரூபா 1-8-0 முதல் ரூபா 2-0-0 வரை.

### சுத்தமான சந்தன எண்ணெய்.

ஒரு அவுன்ஸ் பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0.

### "சந்தனபாத்துான்"

பெரிய டப்பா 1-க்கு விலை ரூபா 3-0-0
சிறிய டப்பா 1க்கு விலை ரூபா 1-12-0

### பன்னீர் (முதற்றரம்)

பெரிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 3-8-0
சிறிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0

### "மைசூர் அத்தர் திணுசுகள்".

கஸ்தூரி, மல்லிகைப்பூ, தாழம்பூ, மருக்கொழுந்து, குலாபி, சண்பகப்பூ, இரா, மஸ்மா முதலிய அத்தர்கள் தோலா 1க்கு விலை ரூபா 5 முதல் 10, 12, 15, 20, 25 வரை.

தங்களுக்குத் தேவையான வாசனைத்திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

விலாசம்—
எச். சி. சந்திரா & கம்பேனி,
பெங்களூர் சிட்டி,
(இந்தியா).

(Q. 61)

---

அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டுமருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட்கிளாஸ் (முதல்த்தர) தேவ ஔஷதங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

## குஷ்டரோகிகளே!

நீங்கள் இனி இந்த நாக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம்.
பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

## நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்.

நிராசெனக் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப்படுத்தி விட்டது.

திமிருடன் உள்ள குஷ்டம், குஷ்டரோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது, மூக்கு, உதடு, கை கால் சுரணையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண்சிவந்து வாய் மூக்கில் அர்வாடை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன அழுத ரணங்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் சூலை, வீக்கம், வலி கை கால் குடைச்சல், கிரந்தி, நமைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்புமநரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெணமேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித கர்ம வியாதிகளுக்கும்,

# நமது தாம்பிர பஸ்பம்.

### சாப்பிடுங்கள்.

முப்புவினுல் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாது. பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.
20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினுல் பாதிவிலைக்கு அனுப்பப்படும்

காந்தி! தேஜஸ்!! பலம்!!! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,
அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியானுல் பழனி, T. R. K.

## தங்கபஸ்பம். சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை).

"முடியாத பற்பமது குன்றியுண்ண முனையான காயமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானை பெலனுக்கொக்கும் பெண்களுடனுபோகம்பண்ணி னுக்கால்"

என்ற இக்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும். அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, ரத்தவிர்த்தி உண்டாக்கும் இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும், கொடுத்து இல் வாழ்க்கையில் இன்பத்தைக்கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10., 10நாள் ரூ 5.

## நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.

சாஸ்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் கொடுக்கும். இதோ ஒருமருந்துக்கும் ஸாப்படாத வியாதி இந்தமருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரூ. 20, 20-நாளுக்கு ரூ. 10. அனுமான ஆவரை கிருதம் 80 உருண்டை ரூ. 10

## தாளக பஸ்பம்.

எவ்வளவு கட்டுப்பட்ட காசம் க்ஷயம், ஈளை, இருமல், ஷ்ட ஸ்வாசம், கோழை, கபக்கட்டு அவசியம் தீரும். புட்டி ரூபா 4.

## நாக பஸ்பம்.

சிற் மூலம், ரத்தமூலம், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

## பிரமேக நிவாரணி.

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தசிமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## இதோ? ரசமணி.

பூசைக்குகந்தது வாசிதம்பிக்கும் சகல வசியம், தனலாபம், கீர்த்தி, நினைதகாரியசித்தி, தொழிலபிவிருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், தொத்துநோய் அவயிருத்து மேகபற்று, சொரி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2. 6-மணி ரூபா 10-0-0.

எந்த மருந்துக்கு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விவரமாய் தேக கூறுகளைத் தெரிவிக்கவும், பினங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

(Q. 56 ஈ.)

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.